சுத்திகரிப்பு நிலையம் முறையாக செயல்படுத்த கோரிக்கை

கோவை, மார்ச் 13: கோவை உக்கடம் வாலாங்குளத்தில் பல கோடி ரூபாய் செலவில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (எஸ்டிபி) அமைக்கப்பட்டது. இந்த சுத்திகரிப்பு நிலையம் கடந்த ஆண்டு திறக்கப்பட்டது. ஆனால், இதில் கழிவு நீர் முறையாக சுத்திகரிக்கப்படுவதில்லை. தினமும் 3 மில்லியன் கழிவு நீர் சுத்திகரிக்க திட்டமிடப்பட்டிருந்தது.

பயாஜிக்கல் ஆக்சிஜன் டிமான்ட், இ கோலி கட்டுபாட்டு போன்றவற்றின் மூலமாக குளத்து நீர் சுத்தமாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் குளம் ஆகாயதாமரைகள், தொடர்ந்து பாயும் மருத்துவ கழிவு, சாக்கடை நீர் கழிவுகளால் குடலை குமட்டும் நாற்றத்துடன் கிடக்கிறது.

இந்த பகுதியில் வாக்கிங் செல்லும் பொதுமக்கள் துர்நாற்றம் தாங்க முடியாமல் தவிக்கின்றனர்.

கருப்பு நிறத்தில் அசுத்தமாக காணப்படுகிறது. சுத்தி கரிப்பு நிலையம் அமைத்தும் முறையாக பயன்படுத்தாமல் முடங்கி போய் கிடக்கிறது. லங்கா கார்னர், கூட் செட் ரோடு, ராஜ வீதி, ஸ்டேட் பாங்க் ரோடு, அரசு கலைக்கல்லூரி ரோடு சாக்கடை கால்வாய்களின் மூலமாக பாயும் கழிவுகள் நேரடியாக குளத்திற்குள் சுத்திகரிக்கபடாமல் பாய்கிறது.

பல கோடி ரூபாய் செலவிட்டு அமைக்கப்பட்ட சுத்திகரிப்பு நிலையம் இயங்குவதில் பல்வேறு தடைகள் இருப்பதாக தெரிகிறது. கழிவு பாயும் வாய்க்காலில் இருந்து நீரை முறையாக சுத்திகரிப்பு தொட்டிக்கு அனுப்புவதில்லை.

பெயரளவிற்கு இயங்குவது போன்ற தோற்றத்தை காட்டி வருவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர். சுத்திகரிப்பு பணிகளை தீவிரமாக செய்தால் வாலாங்குளம் நாறி போய் கிடப்பதை தவிர்க்க முடியும். படகு சவாரிகளை சிறப்பாக செய்ய முடியும் என பொதுமக்கள் தெரிவித்தனர்.

சதுரங்க போட்டியில் வென்றவர்களுக்கு பரிசு

கோவை ஒய்.எம்.சி.ஏ சார்பில் நடைபெற்ற சதுரங்க போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பிரபல லேப் ராஸ்கோபி, பித்தப்பை, கல்லீரல், கேன்சர், குடலிறக்க நோய் அறுவை சிகிச்சை நிபுணரும், அனுராக் மருத்துவமனை நிர்வாக இயக்குநருமான டாக்டர் ஜான் தனக்குமார் பரிசு கோப்பைகளை வழங்கினார். அருகில் ஒய்.எம்.சி.ஏ தலைவர் ஜெயக்குமார் உள்ளார்.

சிலிண்டருக்கு மாலை அணிவித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆர்ப்பாட்டம்

கோவை, மார்ச் 13: வணிக சிலிண்டர் தட்டுப்பாட்டை கண்டித்து மா.கம்யூ கட்சினர் சிலிண்டருக்கு மாலை அணிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் ஈரான் மீது நடத்தி வரும் போரினால் உலகெங்கிலும் பெட்ரோலியப் பொருட்களின் விலை மற்றும் விநியோகம் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளது. இதன் எதிரொலியாக இந்தியாவில் வணிகரீதியிலான எரிவாயு சிலிண்டர் விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

திடீர் தட்டுப்பாட்டினால் கோவை மாவட்டத்தில் உள்ள ஆயிரக்கணக்கான பேக்கரிகள், சிறு உணவகங்கள் மற்றும் ஓட்டல்கள், சிறு தொழில்கள் முற்றிலும் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தொழில்களை நம்பியுள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்வாதாரம் கேள்வி குறியாக மாறி உள்ளது.

அந்தவிவகாரத்தில் ஒன்றிய அரசு உடனடியாகத் தலையிட்டு, போர்க்கால அடிப்படையில் மாற்று ஏற்பாடுகள் மூலம் வணிக எரிவாயு சிலிண்டர் விநியோகத்தை முறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி, கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகம் அருகே பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வர்த்தகர் கிளை சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அப்போது காலி வர்த்தக சிலிண்டருக்கு மாலை அணிவித்தும், நாடு முழுவதும் சிலிண்டர் தட்டுப்பாடு உள்ள நிலையில், அப்படி ஒரு பிரச்னையே இல்லை என கூறிவரும் ஒன்றிய அரசை கண்டித்தும் கோஷங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்திற்கு வர்த்தக கிளை பொறுப்பாளர் ஜாகீர் தலைமை தாங்கினார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் பத்மநாபன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் கனகராஜ், கோவை மாவட்ட ஓட்டல் மற்றும் பேக்கரி தொழிலாளர் சங்க பொதுச்செயலாளர் சந்தோஷ் ஆகியோர் கண்டன உரையாற்றினர். இதில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

வணிக எரிவாயு சிலிண்டர் விநியோக தட்டுப்பாட்டை கட்டுப்படுத்த தவறிய ஒன்றிய அரசை கண்டித்து கோவையில் மத்திய தந்தி அலுவலகம் முன்பு சிலிண்டருக்கு மாலை அணிவித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாநகராட்சியில் ரூ.1.05 கோடி மதிப்பில் பணிகள் துவக்கம்

கோவை, மார்ச் 13: கோவை மாநகராட்சி பொது நிதியில், கணபதி புதூர் முதல் வீதியில் 28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால், சிறுபாலம் அமைத்தல், கணபதி மோர் மார்க்கெட் பகுதியில் 40 லட்சம் ரூபாயில் நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் ஆய்வகம், சுற்றுச்சுவர் அமைத்தல், கட்டபொம்மன் வீதி, காந்தி நகர் பகுதியில் 7.50 லட்ச ரூபாயில் மழைநீர் வடிகால், சிறுபாலம் அமைத்தல், மீனாட்சி நகர் மாநகராட்சி சிறுவர் பூங்கா மற்றும் பூம்புகார் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் பணி 10 லட்ச ரூபாய் மதிப்பீட்டிலும், கணபதி, குமரன் நகர், கொரத்தோட்டம், விஎன் நகர் ஆகிய பகுதிகளில் 20 லட்சம் ரூபாயில் மழைநீர் வடிகால், சிறுபாலம் அமைக்கும் பணி என 1.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வளர்ச்சிதிட்டப்பணிகளை கோவை மாநகராட்சி ரங்கநாயகி நேற்று துவக்கி வைத்தார்.

இதையடுத்து, பணிகளை விரைவாக, தரமாக நடத்துமாறு அறிவுறுத்தினார். இந்த ஆய்வில் உதவி பொறியாளர் சக்திவேல் உள்பட அலுவலர்கள் பங்கேற்றனர்.

கேஎம்சிஹெச் மருத்துவமனையில்

எக்மோ சிகிச்சை

கோவை, மார்ச் 13: கோவை கேஎம்சிஹெச் மருத்துவமனை அதிநவீன தீவிர சிகிச்சை அளிப்பதில் முன்னணி மையமாகத் திகழ்கிறது. குறிப்பாக, இதயம் மற்றும் நுரையீரல் செயலிழந்த நிலையில் உள்ள நோயாளிகளுக்கு எக்மோ (ECMO) எனப்படும் செயற்கை சுவாசக் கருவி மூலம் மறுவாழ்வு அளிப்பதில் மருத்துவமனை முதலிடம் பெற்றுள்ளது.

ஒரு நோயாளிக்கு இதயம் மற்றும் நுரையீரல் தானாகச் செயல்பட முடியாத நிலையில் அளிக்க எக்மோ சிகிச்சை வழங்கப்படுகிறது. நோயை குணப்படுத்தாவிட்டாலும், உடல் உறுப்புகள் செய்ய வேண்டிய வேலையைத் தானே செய்யும். இது நோயாளியின் உடல் தானாகவே குணமடைவதற்குத் தேவையான கூடுதல் நேரத்தை வழங்குகிறது.

உடலில் இருந்து ரத்தத்தை மெதுவாகக் குழாய்கள் மூலம் வெளியே எடுக்கிறது. அந்த ரத்தத்தை ஒரு கருவிக்குள் செலுத்தி, அதில் ஆக்சிஜனை சேர்த்து, கரியமில வாயுவை நீக்குகிறது. சுத்திகரிக்கப்பட்ட ரத்தத்தை மீண்டும் நோயாளியின் உடலுக்குள் செலுத்துகிறது. கடந்த 5 ஆண்டுகளில் 200-க்கும் மேற்பட்ட எக்மோ சிகிச்சைகள் செய்யப்பட்டன. 2025-ம் ஆண்டில் மட்டும் 75 எக்மோ சிகிச்சைகளை அளித்துள்ளது.

கோவையில் ரூ.1.39 கோடியில்

மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

கலெக்டர் வழங்கினார்

கோவை, மார்ச் 13: கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளி நலத்துறையின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று நடந்தது. இதில், 141 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு ரூ.1.39 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் பவன்குமார் வழங்கினார். நிகழ்ச்சியில், மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரன், மாநகராட்சி துணை மேயர் வெற்றிச்செல்வன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் வசந்தராம்குமார் மற்றும் தன்னார்வலர்கள், மாற்றுத்திறனாளிகள் பலர் கலந்து கொண்டனர்.

பின்னர், மாவட்ட கலெக்டர் பவன்குமார் நிருபர்களிடம் கூறியதாவது: மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் மடக்கு சக்கர நாற்காலி, இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம், ஊன்று கோல், கறுப்பு கண்ணாடி மற்றும் மடக்கு கோல்கள், காதொலிக்கருவி, பிரெய்லி கைக்கடிகாரம் உருப்பெருக்கி, பிரெய்லி ரீடர் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில், கோவை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளி நலத்துறையின் சார்பில் 137 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு தலா ரூ.1,01,800 மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களும், 4 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு தலா ரூ.7000 மதிப்பீட்டில் கமோட் சக்கர நாற்காலிகள் என மொத்தம் 141 பயனாளிகளுக்கு ரூ.1.39 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

கோவை கலெக்டர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு இருசக்கர வாகனங்களை கலெக்டர் பவன்குமார் வழங்கினார். அருகில் மாநகராட்சி கமிஷனர் சிவகுரு பிரபாகரன், துணை மேயர் வெற்றிச்செல்வன் உள்ளனர்.

கோவையில் பரபரப்பு

நள்ளிரவில் மசாஜ் சென்டரில் திடீர் தீ

கோவையில், திருச்சி சாலையில் சுங்கம் அரசு போக்குவரத்துக்கழக பணிமனை முன்பு உள்ள மசாஜ் சென்டரில் நேற்று தீ விபத்து ஏற்பட்டது.

கோவை, மார்ச் 13: கோவையில் நள்ளிரவில் மசாஜ் சென்டரில் திடீரென தீ பரவியதால் அப்பகுதியினரிடம் பரபரப்பு நிலவியது.

கோவை சுங்கம் பகுதியில் மசாஜ் சென்டர் ஒன்று செயல்பட்டு வந்தது. நேற்று நள்ளிரவு இந்த மசாஜ் சென்டரில் திடீரென தீப்பிடித்தது. தீ அருகில் உள்ள கட்டிடங்களுக்கு பரவும் சூழல் இருந்தது. இது தொடர்பாக கோவை தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு சென்ற தீயணைப்புத்துறையினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். மின் வயர் பழுது காரணமாக தீ ஏற்பட்டிருக்கலாம் என தெரிகிறது.

மசாஜ் சென்டரில் இருந்த பொருட்கள் படுக்கை மற்றும் பல்வேறு அலங்கார பொருட்கள் எரிந்து நாசமானது. இது தொடர்பாக ராமநாதபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். மசாஜ் சென்டர் முறையாக அனுமதி பெற்று செயல்பட்டு வருகிறதா? அதில் விதிமுறை மீறல் உள்ளதா எனவும் விசாரணை நடக்கிறது. மசாஜ் சென்டரில் இருந்த ஆண் பெண்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர். இதனால் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. இந்நிலையில் மசாஜ் சென்டரில் நள்ளிரவு தீ விபத்து ஏற்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியது.

நீண்ட எதிர்பார்ப்புக்கு இடையே

கோவை மேற்கு பைபாஸ் ரோடு இன்று திறப்பு

பொது மக்கள் மகிழ்ச்சி

கோவை, மார்ச் 13: நீண்ட எதிர்பார்ப்புக்கு இடையே கோவை மேற்கு பைபாஸ் ரோடு இன்று திறக்கப்படுகிறது பொது மக்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கோவை மதுக்கரை மைல்கல் பகுதியில் இருந்து நரசிம்மநாயக்கன்பாளையம் வரை 32.43 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேற்கு பைபாஸ் ரோடு அமைக்கும் பணிகள் கடந்த 2024ம் ஆண்டு துவக்கப்பட்டது. மூன்று பேக்கேஜ் முறையில் பணிகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. முதல் கட்டமாக மைல்கல் முதல் மாதம்பட்டி வரை 17.25 மீட்டர் அகலத்தில் நான்கு வழிப்பாதையாக ரோடு போடும் பணி நடத்தப்பட்டது. 250 கோடி ரூபாய் மதிப்பில் நடத்தப்பட்டு வந்த பணி தற்போது நிறைவு பெற்று ரோடு மார்க்கிங் மற்றும் பெயர் பலகை, வழிகாட்டி பலகை அமைக்கும் பணியும் நிறைவு பெற்றது.

இன்று (13ம் தேதி) காலை 10.30 மணிக்கு இந்த பைபாஸ் ரோடு பொது மக்கள் பயன்பாட்டுக்கு திறக்கப்பட உள்ளது. தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் காணொலி காட்சி மூலமாக இந்த பைபாஸ் ரோடு திட்டத்தை துவக்கி வைக்க உள்ளார்.

மேற்கு பைபாஸ் ரோடு வழியாக கோவைப்புதூர், சுண்டக்காமுத்தூர், குளத்துப்பாளையம், பேரூர், செட்டிபாளையம், பேரூர், பச்சாபாளையம் மாதம்பட்டி உள்ளிட்ட பகுதிகளுக்கு எளிதாக சென்று வரலாம்.

இந்த ரோட்டின் வழியாக சிறுவாணி, ஆலந்துறை, தொண்டாமுத்தூர், நரசிபுரம், கோவை குற்றாலம், வெள்ளிங்கிரி மலை, ஈசா யோகா, வைதேகி நீர்வீழ்ச்சி உள்ளிட்ட பகுதிகளுக்கு தடையின்றி சென்றுவர முடியும். மேலும் இந்த ரோடு மருதமலை கோயிலுக்கு செல்லவும் பிரதானமாக பயன்படுத்தப்படும். புதிய பைபாஸ் ரோடு திறக்கப்படும் போது கோவை பாலக்காடு ரோடு வழியாக போக்குவரத்து கணிசமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. பல்வேறு இடர்பாடுகளுக்கு இடையே கோவை கோட்ட மாநில நெடுஞ்சாலைத்துறை திட்ட பிரிவு பொறியாளர்கள் திறம்பட பணிகளை செய்து முடித்துள்ளனர்.

நீண்ட எதிர்பார்ப்புக்கு பின்பு பைபாஸ் ரோடு திறக்கப்படுவது, பொதுமக்களிடம் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதேபோல் உக்கடம் புதிய பேருந்து முனையமும் இன்று திறப்பு விழா காண்கிறது.

நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

(முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டது)(நிடோ) பதிவு அலுவலகம்: டவர் 3, விங் B, கோரேகாவ் சிட்டி மால், கோரேகாவ் சிட்டி, கீரோல் சாலை, ஜூரா (மேற்கு), மும்பை-400 070. பிராந்திய அலுவலகம் முகவரி: எண்.19, 7 ஆவது தளம், கோச்சார் டவர்ஸ், வெங்கட்நாராயணா சாலை, தி.நகர், சென்னை-600017.

nido HOME FINANCE

மின்-ஏலம் - சுடப்பட்ட 15 நாட்கள் விற்பனை அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 கீழ் மின்-ஏலம் மூலமாக விற்பனை.

இதனிலுமல் பொதுமக்களுக்குப் பொதுவாகவும் மேலும் கடன்தாரர், உ.ப கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் ஆகியோருக்குக் குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழ்க்குறிப்பிட்ட பொத்தானது இணைக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கடன் நிலுவைகளை மீட்கும் வரை கீழ்க்குறிப்பிட்டுள்ள தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவாறு, உள்ளது எதுவோ அதுவே" அடிப்படையில் விற்பனை செய்யப்பட உள்ளது. மேற்கூறிய பொத்தானது கடன்தாரர்(கள்), உப கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) முகவரி பெறப்பட்ட கடனுக்காக M/s. நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக அறியப்பட்டது) வசம் நடப்பாண்டு வைக்கப்பட்டுள்ளது. கடனீட்டுக் கடனீந்தோர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்தை அடையாளபூர்வ வகையீனம் செய்துள்ளார்.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்) பெயர்	மீட்பு விதாகை	நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை	ஏலம் நடக்கும் நேரம்
6.	சோமசுந்தரம் மாதையன் (கடன்தாரர்), முத்துலட்சுமி மாதையன் (உப கடன்தாரர்),	கடன் வசதி எண்: L0380STHL00000331652 19.01.2026 தேதியிட்டபடி ரூ.18,05,487/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து ஐந்தாயிரத்து நானூற்று எண்பத்தேழு மட்டும்) மற்றும் அதற்குரிய கூடுதல் வட்டி மற்றும் சட்டப்பூர்வ செலவினங்களும் உட்பட.)	நிர்ணய விலை: ரூ.15,52,770/- (ரூபாய் பதினைந்து லட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து எழுநூற்று எழுபது மட்டும்) முன்வைப்புத்தொகை: 1,55,277/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரத்து இருநூற்று எழுபத்தேழு மட்டும்)	31-03-2026 காலை 11 மணி முதல் நண்பகல் 12 மணிக்குள் (5 நிமிடங்கள் வரம்பில்லை தன்னிச்சை நீட்டிப்புகளுடன்)

பார்வையிடும் நாள் மற்றும் நேரம்: 23-03-2026 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை	கடைசியாகப்பதிவு செய்யப்பட்ட தேதி: 09-08-2024

சுவாதீனம் எடுத்தல் விவரம்: மனை எண்.45, ஸ்ரீ வெற்றிவேல் நகர், செட்டிசமுத்திரம் கிராமம், அந்தியூர் வட்டம், ஈரோடு பதிவு மாவட்டம், அந்தியூர் சார் பதிவு அலுவலகம், பழைய S.No.163/1, புதிய துணைப்பிரிவிற்கு பிறகு புதிய S.No.163/1a, 163/1c, பரப்பளவு 1929 ச – 12.5m 1917 ½ ச.அடி பரப்பளவு உள்ள சொத்தின் எல்லைகள் கீழ்வருமாறு: கிழக்கு: ராஜன்குமரன் ஆலய்மனையம் சாலை, மேற்கு: மனை எண்.44, வடக்கு: 33 அடி அகல மனை சாலை, தெற்கு: மனை எண்.15, அளவீட்டு விவரங்கள்: கிழக்கு-மேற்காக வடக்கு:55 அடி, கிழக்கு மேற்காக தெற்கு:33+5= 38 அடி, வடக்கு தெற்காக கிழக்கு: 40 அடி, வடக்கு தெற்காக மேற்கு: 38+5= 43 அடி. பொத்தம் 1929 ½ ச.அடி பரப்பளவு உள்ள சொத்து அனைத்து பயன்பாட்டு உரிமைகளும் பாதகங்களும் உடையது.

குறிப்பு:- 1) ஏல விற்பனை https://sarfaesi.auctiontiger.net இணையதளம் வழியே இயங்குதளத்தில் நடத்தப்படும் மேலும் மதிப்பு மின்னஞ்சல், அடையாளச் சான்று & நிழற்படச் சான்று, பான் அட்டை வைத்திருக்கும் மேலும் கேட்பு வணவோலை/ NEFT/RTGS மூலம் முன்வைப்புத்தொகை பணப்பட்டுவாடா செலுத்தியிருக்கும் ஏலதாரர்கள் மட்டும் இந்த "இயங்குதள மின்-ஏலத்தில்" பங்கேற்க தகுதி பெறுவார்கள்.
2) திட்டமிடும் ஏலதாரர்கள் அவர்தம் முன்வைப்புத்தொகையை கேட்பு வரைவோலை/ RTGS/NEFT மூலம் செலுத்தும் முறையில் சமர்ப்பிக்க வேண்டும்: பயனாளி பெயர்: நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், வங்கி: ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, கணக்கு எண். 65226845199, சர்பாசி-ஏலம், நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், IFSC குறியீடு: SBIN0001593.
3) முன்வைப்புத்தொகையுடன் ஏலப்புள்ளிப் படிவம் இயங்குதள விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள்: 30-03-2026 ஆகும்.
4) விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, இணையதளம் https://sarfaesi.auctiontiger.net காணவும் அல்லது திரு. மொலிக் ஸ்ரீமாலி தொலைபேசி +91-8351896643/9173528727, உதவிஇணைப்பு மின்னஞ்சல் முகவரி: Support@auctiontiger.net தொடர்பு கொள்ளவும்.

மை/பி எண். 9962784954/8667672466 — ஒம்/- அதிகாரம்பெற்ற அதிகாரி
நாள்: 13.03.2026 — நிடோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்(முன்னதாக எடெல்வீஸ் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக அறியப்பட்டது)

பேரூர் டி.எஸ்.பி தலைமையில்

போதைப்பொருள், குற்றத்தடுப்பு குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம்

மதுக்கரை, மார்ச் 13: கோவை அடுத்த ஈச்சனாரி அருகே உள்ள தனியார் பல்கலைக்கழக வளாகத்தில், பேரூர் சரக காவல்துறை சார்பில், கல்லூரி மாணவர்களுக்கான போதைப் பொருள் பயன்படுவதால் ஏற்படும் விளைவுகள் என்ன? சாலை விபத்துகளால் குடும்பங்கள் படும் அவஸ்தைகள் என்ன? குற்ற நடவடிக்கைகளை தவிர்ப்பது எப்படி என்பது குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது.

பேரூர் சரக டிஎஸ்பி சுரேஷ்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

ஈச்சனாரி அருகே தனியார் பல்கலைக்கழகத்தில் பேரூர் சரக டி.எஸ்.பி.சுரேஷ் தலைமையில் மாணவர்களுக்கான விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது.

இதில் போதைப்பொருள் போதைப்பொருள் பயன்படுத்துவதனால் ஏற்படும் விளைவுகள் என்ன குற்ற நடவடிக்கைகளை தவிர்ப்பது எப்படி என்பது குறித்து, பேரூர் சரக டிஎஸ்பி சுரேஷ், மாணவர்கள் மத்தியில், விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சிறப்புரை ஆற்றினார். மேலும் நிகழ்ச்சியின் போது, தற்போது மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள, கோவை டிஜிகாப் ஆப்'பை பயன்படுத்துவது எப்படி? நன்மைகள் என்ன? என்பது குறித்து மாணவர்களுக்கு விளக்கி கூறப்பட்டது.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், பி பில்டிங், கங்கா டவுனோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014 கிளை அலகு: எண்.1510, 2 ஆவது தளம், ஸ்ரீ காம்ப்ளெக்ஸ், திருச்சி சாலை, கோயம்புத்தூர், தமிழ்நாடு-641018

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்பாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு சொத்தை விற்பனை செய்வது விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.
இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்/ உ.ப-கடன்தாரர்/ அ.மானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுக் கொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கையாதீனம் செய்துள்ளார்.
கடனீட்டு சொத்துகளை அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்-ஏலம் மூலமாக 13.04.2026 தேதியன்று விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும்.
விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்னாளிய எஸ். வாரண்டையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத்தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	மாதிரியை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	வருங்கால விற்பனைகள் / நிர்வாகத் வருகிறது சார்பாக (K)
1	கடன் எண். HL00118100000006011923 முகமது அலி (கடன்தாரர்), K M ஜமீலா (உப கடன்தாரர்)	மொத்த நிலுவைத் தொகை: 11.12.2025 தேதியின்படி ரூ.4,04,982/- (ரூபாய் நான்கு லட்சத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து என்பதது இரண்டு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆன்டொன்றுக்கு 15.60% வட்டி.	கையக	கோபம்புத்தூர் பதிவு மாவட்டம், அன்னூர் துணைப் பதிவு மாவட்டம், அவிநாசி தாலுகா, கணுர் கிராமத்தில், பட்டா எண் 1220-இன் படி, S.F.No.118/3a-இல் 0.83 ஏக்கர், S.F.No.118/3b-இல் 0.83 ஏக்கர், S.F.No.120/24-இல் 0.61 ஏக்கர், S.F.No.120/2b-இல் 0.61 ஏக்கர், மற்றும் பட்டா எண் 548-இன் படி S.F.No.121/1-இல் உள்ள 1.37 ஏக்கர். இந்த 1.38 ஏக்கரில் S.F.No.121/2a-இல் 1.29 ஏக்கர், பட்டா எண் 1483-இன் படி S.F.No.121/2B-இல் உள்ள 0.56 ஏக்கரில் 74 சதுர அடி. ஆக மொத்தம் 5.53 ஏக்கர் 74 சதுர அடி நிலத்தில், 5.52 ஏக்கர் நிலங்கள் கோபம்புத்தூர் நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநரால் DTCP NO.437/2018, தேதி 19.09.2018 மற்றும் கணுர் ஊராட்சி செயல் அலுவலரால் Na.Ka.No.1380/2017/A2, தேதி 08.10.2018 அன்று மனைப்பிரிவுத் திட்டத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டு "வெற்றி அவென்யூ" எனப் பெயரிப்பட்ட மனைப்பிரிவுகளாக மாற்றப்பட்டு உள்ளது. அதில் பிளாக் எண் F-இல், இனம் எண் 1:- (விற்பனைப் பத்திர ஆவணம் எண். 631/2023-இன் படி) பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள, மனை எண் 27-இன் மேற்குப் பகுதி, 667.5 சதுர அடி பரப்பளவு உள்ளது. அதன் மீது கட்டப்படவுள்ள கட்